**12-ம் வகுப்பு உயிரி-விளங்கியல்**

**3. இனப்பெருக்க நலன்**

1. பின்வரும் கருத்தடை சாதனங்களில் எது கருப்பையில் பொருத்துவதற்கு பொருத்தமற்றதாக உள்ளது? (AIIMS 2013)

   1. புரோஜெஸ்டாசெர்ட் 2. CuT
   3. லிப்பஸ் வளையம் 4. மல்ட்டிலோடு

2. கூற்று: சீரியக்க முறை என்பது ஒரு இயற்கையான கருத்தடை முறை ஆகும். அந்த காலங்களில் தம்பதிகள் உடலுறவை தடுக்கும் முறை ஆகும்.

   காரணம்: உடலுறவை தவிர்க்க வேண்டிய நாட்கள் என்பதால் அண்டசெல் விடுவித்தலுக்கு பிறகு 5 லிருந்து 10 நாட்கள் தவிர்க்க வேண்டும். (AIIMS 2013)

   1. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது.
   2. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் இக்கூற்றை விளக்கவில்லை
   3. கூற்று சரி, காரணம் தவறு.
   4. கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

3. கருவெளிக்கருவுறுதல் தொழில் நுட்பம் என்பது ∴பாலோபியன் குழாய்க்குள் கீழ்க்கண்ட எதனை நுழைப்பது (AIPMT 2010)

   1. கருமுட்டை மட்டும், 8 செல் நிலையில்
   2. ஆரம்ப கருமுட்டை (1.8 செல் நிலை கருமுட்டை
   3. கருமுட்டை 32 செல்நிலை
   4. சைகோட் மட்டும்

4. பனிகுடத்துளைப்பு நுட்பத்தின் அனுமதிக்கப்பட்ட பயன்பாடு (AIPMT 2010)

   1. பிறக்கும் குழந்தை பால் தன்மை கண்டறிதல்
   2. செயற்கை விந்து உள்ளேற்றம்
   3. கருவை வாடகைத்தாய் கருப்பைக்குள் மாற்றுதல்
   4. ஏதேனும் மரபணு குறைபாட்டை கண்டறிதல்

5. மனிதனில் நீர் இழப்பு மற்றும் நோய் உண்டாக்கும் உயிரிகளிடமிருந்து பாதுகாக்ககூடிய மேல்தோல் அடுக்கு எது (AIIMS 1994)

   1. அடுக்கு லூசிடம் 2. அடுக்கு ஸ்பைரோசம்
   3. அடுக்கு ஜெர்மினாடிவம் 4. அடுக்கு கார்னியம்

6. அண்டகத்தில் இருந்து அண்டம் வெளிப்படுவது இந்த நிலையில் நடைபெறுகிறது (AIPMT 1989)

   1. இரண்டாம் நிலை அண்ட செல் 2. முதல் நிலை அண்ட செல்
   3. ஊகோனியல் நிலை 4. முதிர்ந்த அண்ட செல்

7. புறத்தோற்றம் மற்றும் பணியில் கருவின் செல்கள் வெவ்வேறு பகுதிகளாக மாறும் நிகழ்வின் பெயர் (AIPMT 1989)

1. வேறுபாடு அடைதல்
2. வளர் உருமாற்றம்
3. உறுப்புகளாக்கம்
4. மறுசீரமைப்பு

8. தாமிரம் வெளிவிடும் உள்கருப்பை சாதனம் (IUD) யிலிருந்து வெளியாகும் தாமிர அயனிகள். (CBSE PRE 2010)

1. அண்ட உருவாதலை தடுக்கிறது
2. கருப்பையில் கருப்பதிவிற்கு சரியான சூழலை உருவாக்காது
3. விந்தனு செல்களை விழுங்குதல் அதிகரிப்பு
4. விந்து இயக்கத்தைக் குறைக்கிறது.

9. உடல் வெளிக் கருவுறுதல் தொழில்நுட்பத்தில் கீழ்காணும் எந்த ஒன்று பெல்லோப்பியன் நாளத்தினுள் பொருத்தப்படுகிறது? (CBSE PRE 2010)

1. கருமுட்டை மட்டும்
2. கரு மட்டும், 8 செல் நிலையில் வரை
3. கருமுட்டை அல்லது 8 செல் நிலைக்கு முற்பட்ட கருமுட்டை
4. 32 செல்நிலை கொண்ட கரு.

10. பனிக்குடத் துளைப்பு தொழில் நுட்பத்தின் அனுமதிக்கப்பட்ட பயன்பாடு. (CBSE PRE 2010)

1. ஏதேனும் மரபணு அசாதாரணத்தைக் கண்டறிதல்.
2. பிறக்காத சிசுவின் பாலினத்தைக் கண்டறிதல்.
3. செயற்கை விந்து உள்ளேற்றம்.
4. வாடகைத்தாயின் கருப்பையில் கருவை இடமாற்றுதல்.

11. பொருத்துக. (NEET 2021)

| பட்டியல் 1 | | பட்டியல் 2 | |
|---|---|---|---|
| a) | பெட்டகம் (Vaults) | 1. | கருப்பை வாயினுள் நுழைவதை தடுத்தல |
| b) | IUDS | 2. | விந்து நாளம் துண்டிப்பு |
| c) | வாசக்டமி | 3. | கருப்பை வாயினுள் விந்து செல்கள் விழுங்கப்படுதல் |
| d) | டியுபக்டமி | 4. | அண்ட நாளதுண்டிப்பு |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| 1 | (iv) | (ii) | (i) | (iii) |
| 2. | (i) | (iii) | (ii) | (iv) |
| 3. | (ii) | (iv) | (iii) | (i) |
| 4. | (iii) | (i) | (iv) | (ii) |

12. கீழ்க்கண்டவற்றில் ஹார்மோன் வெளியிடும் உள்கருப்பை சாதனம் எது? (NEET 2021)

1. CuT 2. LNG 20 3. Cu 7 4. Multiload 375

13. பாலியல் நோய்கள் எதன் மூலம் பரவும் (NEET 2021)

(a) சுத்தமான ஊசிகள்

(b) நோயுற்ற மனிதனிடமிருந்து இரத்தம் பெறுதல்

(c) முத்தமிடுதல்

(d) மரபுரீதியாக

1. (a), (b) மற்றும் (c) 2. (b), (c) மற்றும் (d)

3. (b) மற்றும் (c) 4. (a) மற்றும் (c)

14. பல அண்ட வெளியேற்றம் கருமாற்றம் நுட்பத்தில் இடம் பெறாத படிநிலை எது? (NEET 2021)

1. பசுவின் LH ஹார்மோன் அதிக அண்ட வெளியேற்ற திறனுடையது
2. பசுவானது ஒரே நேரத்தில் 6-8 முட்டைகள் வெளியேற்றும்
3. பசுவில் செயற்கை கருத்தருத்தறித்தல் முறையில் கருவுறுதல் நிகழ்துதல்
4. கருத்தறித்த முட்டையினை 8-32 செல் நிலையில் வாடகைத்தாய்க்கு இடமாற்றம் செய்தல்

15. சோதனை குழாய் குழந்தை பிறத்தல் என்பது?

(AIPMT 2003)

1. சோதனை குழாயில் உருவாகிறது
2. திசு வளர்ப்பு முறை
3. அண்டம் வெளியில் கருவுறுதல் செய்யப்பட்டு பின்பு கருப்பையில் பதிய வைக்கப்படுகிறது
4. கருவுறுதல் இல்லாமல் கருப்பையில் உருவாகிறது

16. கீழ்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து தொகுதி I மற்றும் தொகுதி II–ஐ பொருத்தி எழுதுக : (NEET 2018)

| தொகுதி I | | தொகுதி II |
|---|---|---|
| 1. பெருக்க நிலை | - | i. எண்டோமெட்ரிய படலம் சிதைதல். |
| 2. சுரக்கும் நிலை | - | ii. ∴பாலிகுலார் நிலை |
| 3. மாதவிடாய் | - | iii. லூட்டியல் நிலை |

| | a | b | c |
|---|---|---|---|
| 1 | (i) | (iii) | (ii) |
| 2 | (ii) | (iii) | (i) |
| 3 | (iii) | (ii) | (i) |
| 4 | (iii) | (i) | (ii) |

17. மருந்தறிவியலில் ஆன்டிபையாட்டிக் உறவுமுறை தயாரிக்க எவ்வகையான இனத்தொகை உறவுமுறை பயன்படுகிறது? (NEET 2018)

1. பகிர்ந்துறவு
2. ஒட்டுண்ணி உறவு
3. ஒருங்கிணைந்த உறவு
4. ஓரின அழிவு கூட்டணி உறவு.

18. கறுவுற்றலை பராமரிக்க தாய் சேய் இணைப்பு திசுவினால் சுரக்கப்படும் ஹார்மோன்கள் யாவை? (NEET 2018)

1. HCG, hPL, ஈஸ்டிரஜன், ரிலாக்சின், ஆக்ஸிடோசின்.
2. HCG, hPL, புரோஜெஸ்ட்டோஜன், ஈஸ்டிரஜன்.
3. HCG, hPL, புரோஜெஸ்ட்டோஜன், புரோவாக்டின்.
4. HCG, புரோஜெஸ்ட்டோஜன், ஈஸ்டிரஜன், குளுக்கோகார்ட்டிகாய்டுகள்.

19. பாலூட்டிகளின் கருவிலுள்ள ஆம்னியான் எவற்றிலிருந்து கொணரப்படுகிறது? (NEET 2018)

1. எண்டோடெர்ம் மற்றும் மீசோடெர்ம்
2. மீசோடெர்ம் மற்றும் டுரோ∴போபிளாஸ்ட்
3. எக்டோடோம் மற்றும் மீசோடெர்ம்
4. எக்டோடோம் மற்றும் எண்டோடெர்ம்.

20. ஸ்பெர்மியோஜெனிசிஸ்னுக்கும் ஸ்பெர்மியேஷனுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் எது? (NEET 2018)

1. ஸ்பெர்மியோஜெனிசிஸ்ஸில் ஸ்பெர்மட்டாசோவாக்கள் உருவாகின்றன˙ ஸ்பெர்மியேஷனில் ஸ்பெர்மாட்டிகள் உருவாகின்றன.
2. ஸ்பெர்மியோஜெனிசிஸ்ஸில் செர்டோலி செல்களிலிருந்து ஸ்பெர்மட்டாசோவாக்கள் செமினி∴பெரஸ் குழனினுள் வெளியிடப்படுகின்றன ஸ்பெர்மியேஷனில் ஸ்பெர்மட்டாசோவாக்கள் உருவாகின்றன.
3. ஸ்பெர்மியோஜெனிசிஸ்ஸில் ஸ்பெர்மாட்டிடுகள் உருவாகின்றன ˙ ஸ்பெர்மியேஷனில் ஸ்பெர்மட்டாசோவாக்கள் உருவாகின்றன.
4. ஸ்பெர்மியோஜெனிசிஸ்ஸில் ஸ்பெர்மட்டாசோவாக்கள் உருவாகின்றன˙ ஸ்பெர்மியேஷனில் ஸ்பெர்மட்டாசோவாக்கள் சொட்டோலிக் செல்களிலிருந்து செமினி∴பெரஸ் குழலினுள் வெளியிடப்படுகின்றன.

21. மாதவிடாய் சுழற்சியில் ஹார்மோன்களின் சரியான வரிசையை எழுது. (AIIMS 2015)

1. ஈஸ்ட்ரோஜன், FSH, புரோஜெஸ்ட்ரான்

2. ஈஸ்ட்ரோஜன், புரோஜெஸ்ட்ரோன், FSH

3. FSH, புரோஜெஸ்ட்ரோன், ஈஸ்ட்ரோஜன்

4. FSH, ஈஸ்ட்ரோஜன், புரோஜெஸ்ட்ரோன்

22. கொடுக்கப்பட்ட தொகுதிகளை பொருத்தி சரியான விடையை தேர்ந்தெடு. (NEET 2020)

| தொகுதி-I | தொகுதி-II |
|---|---|
| (a) பிளாசண்டா | (i) ஆன்டிரஜன் |
| (b) சோனா பெல்லுசிடா | (ii) மனித கோரியானிக் கொணடோடிராபின் |
| (c) பல்போ யுரேத்திரல் சுரப்பிகள் | (iii) அண்டத்தின் அடுக்கு |
| (d) லீடிக் செல்கள் | (iv) பீனிஸை வழவழப்பாக்குதல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| 1. | (iv) | (iii) | (i) | (ii) |
| 2. | (i) | (iv) | (ii) | (iii) |
| 3. | (iii) | (ii) | (iv) | (i) |
| 4. | (ii) | (iii) | (iv) | (i) |

23. கிரா.:.பியன்.:.பாலிக்கிளிலிருந்து அண்ட செல் வெளியாதலுக்கு ஹார்மோனின் எந்த நிலை உதவுகிறது (NEET 2020)

1. ஈஸ்டுரோஜனின் உயர் அடர்வு
2. புரோஜெஸ்டிரானின் உயர் அடர்வு
3. LH- இன் குறை அடர்வு
4. FSH இன் குறை அடர்வு

25. இரண்டாம் நிலை அண்ட செல்லில் குன்றல் பகுப்பு எந்த நிலையில் நிறைவடைகிறது ?

1. அண்ட வெளியாதலுக்கு முன்
2. புணர்ச்சி நடைபெறும் நேரத்தில்
3. கரு உருவான பிறகு
4. விந்தணு மற்றும் அண்ட செல் இணையும் நேரத்தில்

26. முட்டையின் உட்கருவிலிருந்து இரண்டாம் துருவ உறுப்பு வெளியேறுவது (NEET 2019)

1. முதல் பிளவிபெருகலுடன் நடைபெறுகிறது
2. விந்து நுழைந்த பின் ஆனால் கருவுறுதல் நடைபெறுவதற்கு முன்
3. கருவுறுதலுக்கு பின்
4. விந்து அண்டத்துக்குள் நுழைவதற்கு முன்

27. தற்போது நடைமுறையிலுள்ள இந்தியாவில் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட குடும்பக்கட்டுப்பாட்டு முறை (AIPMT PRELIMINARY 2011)

1. உள்கருப்பை சாதனங்கள்
2. கருப்பை வாய் மூடிகள்
3. கருக்குழாய் தடை
4. திசைச் சவ்வுகள்

28. மனித இனப்பெருக்க மண்டலத்தில் விந்து நுண் நாளங்களில் ஏற்படும் அடைப்பானது கீழ்கண்டவற்றில் இனச் செல்கள் கடத்தப்படுவது தடைபடுவது

(AIPMT PRELIMINARY 2011)

1. கலவுக்காய் வாயிலிருந்து கருப்பைக்கு
2. விந்தகத்திலிருந்து விந்தக மேல் சுருண்ட குழலுக்கு
3. விந்தக மேல் சுருண்ட குழலிலிருந்து விந்து நுண் நாளங்களுக்கு
4. அண்டகத்திலிருந்து கருப்பைக்கு

29. கீழ்கண்டவற்றுள் எத்தனை வார கருநிலையில் மருத்துவ ரீதியான கருகலைப்பு பாதுகாப்பானது (AIPMT PRELIMINARY 2011)

1. 6 வாரங்கள்
2. 8 வாரங்கள்
3. 12 வாரங்கள்
4. 18 வாரங்கள்

30. அண்ட நாளத்திலுள் இனச்செல் இடமாற்ற தொழில் நுட்பம் எவ்வகை பெண்களுக்கு பரிந்துரைக்கப்படுகிறது. (AIPMT MAIN 2011)

1. கருவுறும் சூழல் இல்லாதவர்களுக்கு
2. அண்டசெல்கள் உற்பத்தி செய்ய இயலாதவர்கள்.
3. சிசுவை தாங்கும் திறன் இல்லாத கருப்பை கொண்டவர்கள்
4. விந்து செல் செல்வதற்கு தடையாக உள்ள கருப்பை வாய் கால்வாய்

31. கருப்பை பின்வருவனவற்றுள் காணப்படுவது (AIPMT 1991)

1. கரு
2. பகுதி கருவுடைய நுனிமொட்டு
3. சூல்
4. கருவூண்திசு

32. லீடிக் செல்களின் அமைவிடம் மற்றும் சுரப்பு (AIPMT 1991)

1. கல்லீரல் - கொலஸ்ட்ரால்
2. அண்டகம் - எஸ்ட்ரோஜன்
3. விந்தகம் – டெஸ்டோஸ்டீரோன்
4. கணையம் / குளுக்கோகான்

33. கருவுறுதலுக்கு வேதிபொருள் எதிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது? (AIPMT 1991)

1. உடலினுடைய போலர் பகுதி
2. உயிரணுக்களின் நடுபகுதி துண்டு
3. முதிர்ந்த முட்டைபகுதி
4. ஆக்ஸோசோம்

34. பிளவிப்பெருகலின்போது, செல்களைப் பற்றிய உண்மையான கூற்று எது? (AIPMT 1991)

1. நியூக்ளியஸ் மற்றும் சைட்டோபிளாசத்திற்கு இடையேயான விகிதம்
2. செல்களின் அளவு அதிகரிப்பது இல்லை
3. செல்களில் ஆக்ஸிஜன் பயன்பாடு குறைவாக இருக்கும்
4. செல்பிரிதல் என்பது குன்றல் பிரிவைப் போன்றது

35. புதிதாக வெளியிடப்பட்ட மனித அண்டத்தில் காணப்படுவது (AIPMT 1991)

1. ஒரு Y-குரோமோசோம்
2. ஒரு X - குரோமோசோம்
3. இரு X - குரோமோசோம்
4. ஒரு X மற்றும் ஒரு Y குரோமோசோம்

36. பின்வருவனவற்றுள் எது அனைத்து வகை RNA களையும் உற்பத்தி செய்கிறது

(AIIMS 27.05.2018 AN)

1. r-RNA
2. t-RNA
3. m-RNA
4. DNA

37. கூற்று : தடுப்பு முறையில் விந்து செல் அண்ட செல் சந்திப்பு தடுக்கப்படுகிறது

காரணம்: இது கருவுறுதலை தடுக்கிறது (AIIMS 27.05.2018 AN)

1. கூற்று மற்றும் காரணம் சரியென்றால், காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது
2. கூற்று மற்றும் காரணம் சரி ஆனால் காரணம் கூற்றை சரியாக விளக்கவில்லை
3. கூற்று சரி ஆனால் காரணம் தவறு
4. கூற்று மற்றும் காரணம் தவறு

38. சோதனை குழாய் குழந்தை என்பது (AIPMT 1996)

1. கருப்பையின் மூலம் கருவுறுதலும் வளர்ச்சியும் நடைபெறுகிறது
2. உடல் வெளிக் கருவுறுதல் மற்றும் கருவை கருப்பையினுள் செலுத்துதல்
3. குழந்தை வளர்வது சோதனைக்குழாயில்
4. சோதனைக்குழாயில் கருவுறுதல் மற்றும் கரு வளர்ச்சியும் நடைபெறும்

39. பாலினத்தை தீர்மானிப்பது ஆம்னியோட்டிக் திரவத்தில் உள்ள எவ்வகை செல்கள் தீர்மானிக்கிறது. (AIPMT 1997)

1. கயாஸ்மேட்டா
2. கைனடோகோர்
3. பார் உடல்கள்
4. ஆட்டோ சோம்கள்

40. தற்போதுள்ள மக்கள் தொகையானது. (AIPMT 1997)

1. 15 டிரில்லியன்
2. 6 டிரில்லியன்
3. 500 மில்லியன்
4. 100 மில்லியன்

41. பின்வருவனவற்றுள் ஜுலை 11 எத்தினமாக அனுசரிக்கப்படுகிறது. (AIIMS 2003)

1. உலக மக்கள் தொகை தினம்
2. புகையிலை ஒழிப்பு தினம்
3. உலக சுற்றுச்சுழல் தினம்
4. உலக சுகாதார தினம்

42. கருக்குழல் தடை முறை என்பது (AIPMT 2014)

1. சிறு அளவிலான பெல்லோபியன் குழாய் நீக்கப்படுகிறது அல்லது முடிச்சிடப் படுகிறது.
2. அறுவை சிகிச்சை மூலம் அண்டகங்கள் நீக்கப்படுகிறது
3. சிறு அளவிலான விந்து நாள குழல் நீக்கப்படுகிறது அல்லது முடிச்சிடப்படுகிறது
4. அறுவை சிகிச்சை மூலம் கருப்பை நீக்கப்படுகிறது.

43. ஹார்மோன் வெளிவிடு உள்கருப்பை சாதனம் (AIPMT 2014)

1. மல்டிலோட் 375
2. LNG-20
3. கருப்பை வாய்மூடி
4. வால்ட் (Vault)

44. துணை இனப்பெருக்க தொழிற்நுட்பத்தில், IVF எந்த இடமாற்றத்துடன் தொடர்புடையது (AIPMT 2014)

1. அண்டத்தை பெல்லோபியன் குழாயில் செலுத்துதல்
2. கருமுட்டையை பெல்லோபிய குழாயில் செலுத்துதல்
3. கருமுட்டையை கருப்பைக்குள் செலுத்துதல்
4. 16 பிளாஸ்டோமியர் நிலை கருகோளத்தை அண்ட நாளத்தினுள் செலுத்துதல்

45. இடம் மாறிய கர்ப்பம் எதைக் குறிக்கிறது (AIPMT 2015)

1. கருப்பையை தவிர வேறு இடத்தில் கருவை பொருத்துதல்
2 .கருப்பையில் குறைபாடு உள்ள் கருவை பொருத்து
3. ஹார்மோன்கள் சமநிலை காரணமாக கர்ப்பம் நிறுத்தப்படுகிறது
4. மரபணு அசாதாரணத்துடன் கூடிய கர்ப்பங்கள்

46. குழந்தை பேறு இல்லாத தம்பதியரை GIFT என்ற தொழில்நுட்பத்தின் மூலம் குழந்தை பெற்றுக்கொள்ள உதவலாம் (AIPMT 2015)

1. அண்ட நாளத்தினுள் இனச்செல் இடமாற்றம்
2. அண்ட சைட்டோபிளாசத்தினுள் இனச்செல் இடமாற்றம்
3. கருப்பை உள் இடமாற்றம்
4. உடல் வெளி கருவுறுதல்

47. இனப்பெருக்க துணை தொழில்நுட்பத்தில் இனச்செல்களானது ஆய்வகத்தில் கருவுறச்செய்யப்படுகிறது. இக்கருவானது எந்நிலையில் கருக்குழாய்க்குள் செலுத்தப்படுகிறது. (AIIMS 2011)

1. கருமுட்டை செலுத்தப்படவில்லை எனில் 8 பிளாஸ்டோமியர் செல்களுடன் கூடிய கரு
2. கருமுட்டை கருக்குழாயினுள் செலுத்தப்படுகிறது கருக்களை செலுத்துவது இல்லை
3. 8 செல் நிலையில் கருமுட்டையினையோ அல்லது கருவினையோ செலுத்தலாம்
4. 8 முதல் 24 செல் நிலை கொண்ட மோருலா நிலையில் கருக்குழாயினுள் செலுத்தப்படுகிறது

48. கூற்று : தற்பொழுது பனிக்குடத்துளைப்பு ஆய்வு தடை செய்யப்பட்டுள்ளது (AIIMS 2011)

காரணம்: பனிக்குடத்துளைப்பு கருவின் குறைபாடுகளை கண்டறியவும் மற்றும் கர்ப்பகாலத்தில் உள்ள மற்ற சிக்கல்களை கண்டறியவும் பயன்படுகிறது.

1. கூற்று காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்
2. கூற்று காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல
3. கூற்று சரி ஆனால் காரணம் தவறு
4. கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

49. கூற்று : மஞ்சள் காமாலையின் போது தோல் மற்றும் கோழைப்படலங்கள் மஞ்சள் நிறமாக மாறுகின்றது.

காரணம்: மஞ்சள் நிறமி பிலிருபின் இரத்த பிளாஸ்மாவிற்கு வெளிர் மஞ்சள் நிறத்தை அளிக்கிறது.

கொடுக்கப்பட்டுள்ள கூற்று மற்றும் காரணங்களுக்கு உரிய சரியான பதிலை கீழ்காண்பனவற்றில் இருந்து தேர்ந்தெடு: (AIIMS 2012)

1. கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது.
2. கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் இக்காரணம் இக்கூற்றை விளக்கவில்லை.
3. கூற்று சரி, காரணம் தவறு.
4. கூற்று, காரணம் இரண்டும் தவறு.

50. கருத்தடையை அடைவதில் நான்கு முறைகள் (A-D) மற்றும் அவற்றின் செயல்முறைகள் (a=d) கீழே கொடுக்கப்பட்டுள்ளன பின்வரும் நான்கு விருப்பங்களில் இருந்து அவற்றின் சரியான பொருத்தத்தை தேர்ந்தெடுக்கவும் (AIPMT 2008)

| முறை | நடவடிக்கை முறை |
|---|---|
| 1. மாத்திரை | (a) விந்தணுக்கள் கருப்பைவாயை அடைவதை தடுக்கிறது |
| 2. ஆணுறை | (b) கருப்பதிவை தடுக்கிறது |
| 3. வாசெக்டமி | (c) அண்டவிடுப்பதை தடுக்கிறது |
| 4. காப்பர்டி | (d) விந்து திரவம் விந்தணுக்கள் இல்லை |

1. 1-(b), 2-(c), 3-(a), 4-(d)
2. 1-(c), 2-(a), 3-(d), 4-(b)
3. 1-(d), 2-(a), 3-(b), 4-(c)
4. 1-(c), 2-(d), 3-(a), 4-(b)

51. கருத்தடை பற்றிய கூற்றுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது அதற்கேற்றார்போல் உள்ள பொருத்தமான விடையை தேர்ந்தெடு (AIPMT 2008)

1. முதல் மூன்று மாதத்தில் செய்யக்கூடிய கருக்கலைப்பானது பாதுகாப்பானது
2. இரண்டாண்டுகள் குழந்தைக்கு தாய்பால் ஊட்டும் பெண்களுக்கு கருத்தரித்தலுக்கான வாய்ப்பு குறைவு
3. காப்பர்-டி போன்ற கருப்பை சாதனங்கள் பயனுள்ள கருத்தடை முறை
4. கருத்தரிப்பதை தடுக்க உடலுறவுக்கு பிறகு ஒருவாரம் வரை கருத்தடை மாத்திரைகள் எடுத்துக் கொள்ளலாம்

மேற்கூறிய நான்கு கூற்றுகளில் எது சரியானது

1. 1, 2 2. 2, 3 3. 3, 4 4. 1, 3

52. சரியான கூற்றை குறிப்பிடுக (AIIMS 25.05.19 FN)

1. சஹேலி வாரத்திற்க்கு ஒரு முறை வாய்வழி கருத்தடையாகும்
2. புரோஜெஸ்டாசெட் ஈஸ்ட்ரோஜனை வெளியிடுகிறது
3. காப்பர்-டி ஒரு தடை முறை
4. விந்துக்குழல் தடை மற்றும் அண்டக்குழல் தடை – இது ஒரு தற்காலிக கருத்தடை முறை

53. அறுமடிய கோதுமையில் ஒரு மடியம் (n) மற்றும் அடிப்படை குரோமோசோம்களின் எண்ணிக்கை (X) என்பது (CBSE 2007)

1. n =21 மற்றும் x=21 2. n =21 மற்றும் x=14
3. n =21 மற்றும் x=7 4. n =7 மற்றும் x=21

54. டி.என்.ஏ விலுள்ள இரண்டு பாலிநியூக்ளியோடைடு சங்கிலி (CBSE 2007)

1. தொடர்ச்சியற்றது 2. எதிரிணை
3. பாதி பழமை பேணுவது (5) இணையானது

55. எதை பயன்படுத்தி மக்காச்சோள, கலப்பீன வீரியம் கண்டறியப்படுகிறது (CBSE 2007)

1. பெற்றோர்கள் இடையேயான தற்கலப்பு
2. அதிக மகசூல் தரும் தாவரங்களிலிருந்து பெறும் விதைகள்
3. திடீர் மாற்ற தூண்டுதல்
4. DNA வை கொண்டு விதைகளை தாக்குதல்

56. வயது அமைப்பின் வடிவியல் பிரதிநிதித்துவத்தின் பண்பு (CBSE 2007)

1. மக்கள் தொகை 2. நிலப்பரப்பு
3. சூழ்நிலை அமைப்பு 4. உயிரினக் குழுமம

57. பனிக்குடத்துளைப்பில் கீழ்க்கண்ட எந்த அறிக்கை தவறானது ? (CBSE 2016 P1)

1. இச்செயல்முறை பொதுவாக 14-16 வார கருவளர்ச்சி கொண்ட பெண்களில் செய்யப்படுகிறது
2. வளர்கருவின் பால்தன்மையை கண்டறிவதற்கு பயன்படுகிறது
3. டவுன் சின்ட்ரோம் குறைபாட்டை கண்டறிய பயன்படுகிறது
4. பிளவு அன்னத்தை கண்டறிய பயன்படுத்தப்படுகிறது

58. மனிதர்களில் கருத்தரித்தல் நடைமுறை மட்டுமே எப்போது சாத்தியமாகும் ? (CBSE 2016 P1)

1. பெலோபியன் குழயில் கருமுட்டை வெளியான பிறகு விந்தணுக்கள் யோனிக்குள் கொண்டு செல்லப்படுகின்றன
2. பெலோபியன் குழாயில் ஆம்புல்லரி இஸ்தமிக் சந்திப்பில் கரு முட்டை மற்றும் விந்தணுக்கள் கொண்டு செல்லப்படுகிறன்றன
3. கருப்பை வாயில் ஆம்புல்லரி இஸ்தமிக் சந்திப்பில் ஒரே நேரத்தில் கருமுட்டை மற்றும் விந்தணுக்கள் கொண்டு செல்லப்படுகிறது
4. கருப்பையில் கருமுட்டை வெளியிடப்பட்ட 48 மணி நேரத்தில் விந்தணுக்கள் கருப்பை வாய்க்குள் கொண்டு செல்லப்படுகின்றன.

59. கருத்தடையின் வரையறுக்கப்பட்ட நடவடிக்கையில் பின்வரும் அணுகுமுறைகளில் எது கொடுக்கப்படவில்லை ? (CBSE 2016 P1)

| | | |
|---|---|---|
| (அ) தடுப்பு முறைகள் | - | கருத்தரிப்பை தடுக்கின்றன |
| (ஆ) உள் கருப்பை சாதனங்கள் | - | விந்தணுக்களை விழுங்குதலை அதிகரித்தல்<br>விந்தனுவின் இயக்கத்தை தடை செய்தல்,<br>விந்தணுவின் கருவுறுதல் திறன் |
| (இ) ஹார்மோன் வழி தடுப்பு | - | விந்தணுக்கள் நுழைவதை தடுத்தல் அண்ட் விடுபடுதலை தடுத்தல், கருத்தரித்தல் |
| (ஈ) விந்து குழல் தடை (வாசெக்டமி) | - | விந்தணு உருவாக்கத்தை தடுக்கிறது. |

60. பொருத்தமான இணை எது ? (AIPMT 2000)

1. சிபிலிஸ் - டிரிபோனிமா பலிடம்
2. AIDS - பேசில்லஸ் கான்சுகாலிஸ்
3. கொனார்கியா - லீஸ்மேனியா டோனிவானி
4. டைபாய்டு - மைக்கோ பாக்டீரியம் லெப்ரே

61. காப்பர் T ன் வேலை என்ன ? (AIPMT 2000)

1. அண்டம் விடுபடுதலைத் தடைசெய்தல்
2. கருவுறுதலை தடைசெய்தல்
3. கருப்பதித்தலை தடைசெய்தல்
4. இனச்செல் உருவாக்கத்தை தடைசெய்தல

62. வாய்வழி கருத்தடை மாத்திரைகளில் காணப்படும் புரோஜெஸ்ட்ரான் பணி என்ன ? (AIPMT 2000)

1. அண்டம் விடுபடுதலை தடைசெய்தல்
2. அண்ட செல்லாக்கத்தை சோதித்தல்
3. விந்து செல்களில் நுழைவை தடுத்து மற்றும் செயலிழக்கச் செய்தல்
4. பால் நடத்தைப் பண்புகளைத் தடுத்தல்

63. வாய்வழி கருத்தடை இதில் அடங்கும் (AIPMT 1998)

1. புரோஜெஸ்ட்டிரான் 2.LH 3. ஆக்ஸிடோஸின் 4. ஸ்டெரால்கள்

64. கர்ப்பமான பெண்கள் கர்ப்பகால துவக்கத்தில் தோன்றும் வாந்தியை தடுப்பதற்காக தைலடமைடு மருந்து பொருட்களை பயன்படுத்துவதால் பிறக்கும் குழந்தைக்கு (AIIMS 2004)

1. மண்ணீரல் இல்லை 2. உதட்டுப் பிளவு
3. கூடுதலான விரல்கள் மற்றும் பாதவிரல் 4. வளர்ச்சியடையாத கால்கள்.

65. பின்வருவனவற்றுள் ஆம்னியோசென்டெசிஸ் பற்றிய தவறான அறிக்கை எது? (AIMPT 2016)

1. இது பொதுவாக ஒரு பெண் 14-16 வாரங்களுக்கு இடையில் கர்ப்பமாக இருக்கும் போது செய்யப்படுகிறது.
2. இது மகப்பேறுக்கு முற்பட்ட பாலினத்தை தீர்மானிக்கப் பயன்படுகிறது.
3. இது டவுன் சிண்ட்ரோம் நோயைக் கண்டறியப் பயன்படுகிறது.
4. பிளவு அண்ணம் இருப்பதை கண்டறிதல்

66. பின்வரும் அணுகுமுறைகளில் எந்த கருத்தடையின் செயல்பாடு தவறாக கொடுக்கப்பட்டுள்ளது? (AIMPT 2016)

1. தடுப்பு முறைகள் - கருத்தரிப்பதை கடுக்கும்
2. உள் கருப்பை சாதனங்கள் - விந்தணுக்களில் பாகோசைட்டோசிஸை அதிகரிக்கவும், விந்தணுக்களின் இயக்கம் மற்றும் விந்தணுக்களின் கருத்தரிக்கும் திறனை அடக்கவும்
3. ஹார்மோன் கருத்தடைகள் - விந்தணுக்களின் நுழைவைத் தடுத்தல் அண்ட விடுப்பின் மற்றும் கருத்தரித்தல் ஆகியவற்றை தடுக்கிறது.
4. வாசெக்டமி - விந்தணு உருவாக்கத்தை தடுக்கிறது.

67. கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தில் குறிப்பாக காட்டப்படுவது

(AIPMT PRELIMINARY 2012)



1. விந்து குழல் தடை
2. அண்டகப் புற்றுநோய்
3. கருப்பை புற்றுநோய்
4. அண்டக் குழல் தடை

68. கீழ்வரும் எந்த தொழில் நுட்பமானது சோதனைக் குழாய் குழந்தை உருவாக்கத்தில் ஈடுபடுகிறது. (AIPMT PRELIMINARY 2012)

1. கருமுட்டையை அண்டநாளத்தில் செலுத்துதல் (ZIFT)
2. அண்ட சைட்டோபிளாசத்தில் விந்து செல்களை செலுத்துதல் (ICSI)
3. கருப்பையினுள் விந்து செல்களை உட்செலுத்துதல் (IUI)
4. அண்ட நாளத்தினுள் இனச்செல் இடமாற்றம் GIFT)

69. பெரிபிளானேட்டா அமெரிக்கானா தொடர்பாக கீழே கொடுக்கப்ட்டுள்ளவற்றிலிருந்து சரியான அறிக்கையைத் தேர்ந்தெடுக்கவும் (AIPMT PRELIMINARY 2012)

1. உணவை அரைப்பது வாய் பகுதிகளால் மட்டும் மேற்கொள்ளப்படுகிறது
2. நரம்பு மண்டலம் முதுகில் அமைந்துள்ளது இது பிரிக்கப்பட்ட நரம்புதிரள் கூட்டுநீளமான இணைப்புகளை கொண்டுள்ளது
3. ஆண்களுக்கு ஒரு ஜோடி குறுகிய நூல் போன்ற மலப்புழைதண்டு உள்ளது
4. நடுக்கடல் மற்றும் பின்குடல் சந்திப்புகளில் 16 மிக நீண்ட மால்பிஜியன் குழாய்கள் உள்ளன.

70. கீழ்காணும் எந்த தொழிற்நுட்பத்தின் மூலம் சோதனைக்குழாய் குழந்தை திட்டம் செயல்படுத்தபடுகிறது? (AIPMT PRELIMINARY 2012)

1. அண்ட நாளத்தினுள் இனச்செல் இடமாற்றம் (GIFT)
2. கருமுட்டையை அண்ட நாளத்தினுள் செலுத்துதல் (ZIFT)
3. அண்ட சைட்டோபிளாசத்தில் விந்து செல்களை செலுத்துதல் (ICSI)
4. கருப்பை உள் இடமாற்றம் (IUI)

71. கீழ்காணும் படம் எதைக் குறிக்கிறது? (AIPMT PRELIMINARY 2012)



1. கருக்குழல் தடை
2. விந்து குழல் தடை
3. அண்டக புற்றுநோய்
4. கருப்பை புற்றுநோய்

72. தற்போதைய நூற்றாண்டில் உலக மக்கள் தொகை பெருக்கம் அதிகரித்துள்ளது குறிப்பாக இந்தியாவிலும் அதிகரித்து வருகிறது. இதற்கான முக்கிய காரணமாக கருதப்படுவது (AIIMS 1998)

1. ஒவ்வொரு குடும்பத்திலும் பல குழந்தைகள் இனப்பெருக்க வயதை அடைந்துள்ளனர்
2. ஒவ்வொரு குடும்பங்களிலும் அதிக குழந்தைகள் பிறந்துள்ளனர்
3. அநேக மக்கள் இளம் வயதில் திருமணம் செய்கின்றர்
4. மூத்த குடிமக்கள் அதிக ஆயுளை பெற்றுள்ளனர்.

73. வாய் வழி கருத்தடை மாத்திரையின் முக்கியமான பகுதி பொருள் (AIIMS 26.05.2018 AN)

(1) புரஜெஸ்ட்டிரோன்
(2) வளர்ச்சி ஹார்மோன்
(3) தைராக்சின்
(4) லூட்டினைசிங் ஹார்மோன்

74. கீழே கொடுக்கப்பட்டுள்ள கருத்தடை சாதனங்களில் பால்வினை நோய் (STDs) மற்றும் எய்ட்ஸ் (AIDS) யிலிருந்து பாதுகாப்பு அளிப்பது எது ? (AIIMS 26.05.2018 AN)

(1) மறைப்புத் திரை
(2) நுரைக்கும் மாத்திரைகள்
(3) கருத்தடை உறை
(4) பாலுட்டும் கால மாதவிடாயின்மை

75. கூற்று : உணர்வு என்பது உயிரினங்களின் வரையறுக்கப்பட்ட பண்புகளில் ஒன்று

காரணம் : சுய உணர்வு உள்ள ஒரே ஒரு உயிரினம் மனிதன் (AIIMS 26.05.2018 AN)

(1) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது
(2) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல
(3) கூற்று சரி காரணம் தவறு
(4) கூற்று மற்றும் காரணம் தவறு

76. கூற்று : கொனோரியா என்பது ஒரு பயங்கரமான நோய்

காரணம் : தொடக்க நிலையில் கண்டறியப்பட்டாலும் முற்றிலுமாக குணப்படுத்த இயலாது (AIIMS 26.05.2018 AN)

(1) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது

(2) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல

(3) கூற்று சரி காரணம் தவறு

(4) கூற்று மற்றும் காரணம் தவறு

77. நார்த்திசுக்கட்டி கருப்பை என்பது (லியோமையோமா) (AIIMS 26.05.2018 FN)

1. கருப்பையின் தீங்கற்ற கட்டி
2. ஹைபோதலாமஸ் புற்றுநோய்
3. கருப்பைவாய் எபிதீலிய புற்றுநோய்
4. பிறப்புறப்பு எபிதீலிய புற்றுநோய்

78. கீழ்கண்டவற்றுள் பால்வினை நோயுண்டாக்கும் நோய் காரணியின் சரியான இணை எது? (AIPMT 1994)

1. சி.ஃ.பிலிஸ் – டிரோபோனீமா பாலிடம்
2. கொனேரியா – எண்டமிபா ஹிஸ்டோலைட்டிகா
3. யூரித்ரைட்டிஸ் – பேசில்லஸ் ஆன்ந்த்ராஸிஸ்
4. மென்மையான புண்கள் – பேசில்லஸ் பிரேவிஸ்.

79. கீழ்கண்டவற்றுள் சோதனை குழாய் குழந்தை பற்றிய சரியான குறிப்பு எது. (AIPMT 1994)

1. முட்டை கருவுறுதல் உடலுக்கு வெளியே நடைபெற்று கருவுற்ற முட்டையானது தாயின் கருப்பையில் வைக்கப்பட்டு கருவளர்ச்சி நிறைவடைகிறது

2. முட்டை கருவுறுதல் பெண்ணின் இனப்பெருக்க கால்வாயில் நடைபெற்று, வெளியெடுக்கப்பட்டு பெரிய சோதனை குழாயில் வளர்க்கப்படுகிறது

3. குறை பிரசவத்தில் பிறக்கும் குழந்தை அடைகாப்பானில் வளர்க்கப்படுகிறது

4. கருவுற்ற முட்டை மற்றும் கருவின் வளர்ச்சி பெரிய சோதனைக் குழாயில் பாதிக்கப்படுகிறது.

80. பிறப்புக் கட்டுப்பாட்டில் கருத்தடை மாத்திரைகளின் பங்கு (AIIMS 2009)

1. கருப்பையில் விந்துசெல்களை கொல்லுதல்
2. கருப்பையில் கருப்பதிதலை தவிர்த்தல்
3. அண்டவெளியிடுதலை தடுத்தல்
4. 2 மற்றும் 3 இரண்டும்

81. கூற்று : பனிக்குடத்துளைப்பு என்பது கருவின் பாலினத்தை கண்டறிய உதவுகிறது.

காரணம் : வளர்ச்சிதை மாற்ற குறைபாடுகள் மற்றும் பிறநோய்களை இதன் மூலம் கர்ப்பகாலத்தில் கண்டறிய முடியும் (AIIMS 2009)

1. கூற்று மற்றும் காரணம் சரி மேலும் காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்
2. கூற்றும் காரணமும் சரி ஆனால் காரணம் கூற்றிற்கு சரியான விளக்கம் இல்லை
3. கூற்று சரி ஆனால் காரணம் தவறு
4. கூற்று மற்றும் காரணம் இரண்மே தவறு

82. கீழே கொடுக்கப்பட்டுள்ள நான்கு முறைகள் (A-D) செயல்பாடு (1-4) கருத்தடை இவற்றில் சரியான இணையை பொருத்துக (AIPMT 2008 P)

| முறைகள் | செயல்பாடு |
|---|---|
| 1) மாத்திரை | - விந்து செல் கலவி கால்வாயை அடைவதை தடுத்தல் |
| 2) கருத்தடை உறை | - கரு பதிதலை தடுக்கிறது |
| 3) வாசக்டெமி | - அண்டம் விடுபடுதலை தடுத்தல் |
| 4) காப்பர்-டி | - விந்து திரவத்தில் விந்தணுக்கள் காணப்படுவதில்லை |

Answer codes:

1. 1=(c), 2=(d) , 3=(a), 4=(b)
2. 1=(b), 2=(c) , 3=(a), 4=(d)
3. 1=(c), 2=(a) , 3=(d), 4=(b)
4. 1=(d), 2=(a) , 3=(b), 4=(c)

83. கருத்தடை குறித்த நேரடியான கருத்து (AIPMT 2008 P)

1. முதல் முப்பருவத்தில் மருத்துவரீதியான கரு கலைப்பு பாதுகாப்பானது
2. குழந்தைக்கு 2 வயது வரை பாலூட்டுவது பொதுவாக கருவுறுதலை தடுக்கும்
3. காப்பர்-டி போன்ற உள்கருப்பை சாதனம் சிறந்த தடுப்பு முறை
4. உடலுறவிற்கு ஒரு வாரத்திற்கு பிறகு கருத்தடை மாத்திரை எடுத்து கொள்வது கருவுறுதலை தடுக்கும்

1. 1, 3 2. 1, 2 3. 2, 3 4. 3, 4

84. கீழ்கண்ட எந்த ஹார்மோன் சுரப்பு இல்லையெனில் மாதவிடாய் சுழற்சி ஏற்படுத்துகிறது? (AIPMT 2006)

1. ஈஸ்ட்ரோஜன் 2. FSH 3. FSH-RH 4. புரோஜெஸ்டிரோன்

85. சோனோகிரா.ஃபி கருவியின் மூலம் மனித உடம்பில் எந்த அதிர்வு எண் கொண்ட மீயொலி செலுத்தப்படுகிறது (AIPMT 2007)

1. 45-70 MHz 2. 30-45 MHz 3. 15-30 MHz 4. 1-15 MHz

86. கூற்று : IUT என்பது எட்டு செல் நிலைக்கு மேற்பட்ட பிளாஸ்டோமியர்களை கொண்ட கருவை ∴பெலோப்பியன் குழல்களுக்கு மாற்றுவது ஆகும்

காரணம் : உடலுக்கு வெளியே கருவை உருவாக்குவதில் இது மிகவும் பிரபலமான முறை ஆகும் (AIIMS 26.05.19 AN)

1. கூற்று மற்றும் காரணம் சரி காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது.
2. கூற்று, காரணம் சரி, காரணம் கூற்றுக்கு சரியான விளக்கம் இல்லை
3. கூற்று சரி காரணம் தவறு
4. கூற்று காரணம் இரண்டும் தவறு

87. பால்வினை நோய்கள் பரவும் முறை (AIPMT MAIN 2012)

(a). கிருமி நீக்கம் செய்யப்பட்ட ஊசிகளை பயன்படுத்துவதால்

(b). பாதிக்கப்பட்ட மனிதரிடமிருந்து இரத்தம் பெறுதல்

(c). நோயினால் பாதிக்கப்பட்ட தாயிடமிருந்து கருவிற்கு பரவுதல்

(d). முத்தமிடுதல்

(e). பாரம்பரியம்.

1. (b), (c) மற்றும் (d) மட்டும்
2. (b) மற்றும் (c) மட்டும்
3. (a) மற்றும் (c) மட்டும்
4. (a), (b) மற்றும் (c) மட்டும்.

88. வரிசை I யை வரிசை II டன் பொருத்துக. (AIPMT MAIN 2012)

| வரிசை I | | வரிசை II |
|---|---|---|
| 1. கருப்பைவாய் மூடிகள் | – | (i) கலவியின்போது விந்து செல்கள் உள்நுழைவு தடுக்கப்படும். |
| 2. உள்கருப்பை சாதனம் | – | (ii) விந்து நாளம் நீக்கப்படுதல் |
| 3. விந்து குழல் தடை | – | (iii) கருப்பையின் விந்து செல்கள் விழுங்கப்படுதல். |
| 4. கருக்குழல் தடை | – | (iv) அண்டநாள நீக்கம் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| 1. | (i) | (iii) | (ii) | (iv) |
| 2. | (ii) | (iv) | (iii) | (i) |
| 3. | (iii) | (i) | (iv) | (ii) |
| 4. | (iv) | (ii) | (i) | (iii) |

89. பின்வருவனவற்றில் எது IUD ஐ வெளியிடும் ஹார்மோனிற்கு எடுத்துக்காட்டு

(AIPMT MAIN 2012)

1. LNG 20
2. Cu 7
3. மல்டிலோடு 375
4. CuT.

90. இவற்றில் எது மனிதனில் மகப்பேறுவை தொடங்குவதில் முக்கிய அங்கமாக இல்லை. (AIPMT MAIN 2012)

1. புரோஸ்டோகிளாட்டின் உற்பத்தி
2. ஆக்ஸிடோசின் வெளியீடு
3. புரோலேக்டின் வெளியீடு
4. ஈஸ்ட்ரோஜன் மற்றும் புரோஜெஸ்புரான் விகிதம் அதிகரித்தல்.

91. கூற்று: காப்பர் T(Cu -T) ஒரு உள் கருப்பை சாதனம் (AIIMS 27-5-2018 FN)

காரணம்: இது விந்தணு செல்லின் இயக்கத்தை குறைக்கிறது.

.
1. கூற்று காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது
2. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல
3. கூற்று சரி ஆனால் காரணம் தவறு
4. கூற்று மற்றும் காரணம் தவறு

92. மூவடுக்கு கருக்கோளமாதலின் முடிவை காட்டுவது (AIPMT 1993)

1. கருக்கோள குழி அழிதல்
2. மூலக்குடல் அழிதல்
3. கருக்கோளத்துளை மூடுதல்
4. நரம்புக்குழல் மூடுதல்.

93. டீலோலெசிதல் முட்டைகளில் கருவுணவு காணப்படும் இடம் (AIPMT 1993)

1. முட்டையின் அனைத்துப் பகுதி
2. ஒரு புறம் மட்டும்
3. இரண்டு புறமும்
4. மையத்தில்.

94. விந்தணுவில் அக்ரோசோம் வினையை தூண்டுவது (AIPMT 1993)

1. திறனேற்றம்
2. லைசின் வெளியிடுதல்
3. சோடியத்தின் ஊடுறுவல்
4. பெர்டிலைசின் வெளியிடுதல்.

95. கேஸ்பேரியன் பட்டைகள் கீழ்கண்டவற்றில் காணப்படுகிறது ? (AIPMT 1999)

1. அகத்தோல்
2. பெரிசைக்கிள்
3. பெரிடேர்ம்
4. புறணி

96. சாஹெலி – வாய்வழி கருத்தடை மாத்திரை இது அதிக அளவு கருத்தடை செயல்பாடு உள்ளது? குறைந்த பக்க விளைவு கொண்டது காரணம் (AIIMS 2014)

1. இது வாரத்திற்கு ஒரு முறை எடுக்கப்படும்
2. இதில் செயற்கை புரோஜெஸ்டிரோன் உள்ளது
3. இதில் சென்ட்குரோமேன் உள்ளது
4. இது புற்று நோய் வீதத்தை குறைக்கிறது.

97. கீழ்க்கண்டவற்றில் எது ஹார்மோன் வெளிவிடும் உள் கருப்பை சாதனம் ? (CBSE 2016 P II)

1. LNG -20
2. Multiload 375
3. லிப்பஸ் வளையம்
4. Cu7

98. பின்வருவனவற்றில் வாசக்டமிபற்றிய தவறான கூற்று எது ? (CBSE 2016 P II)

1. விந்து திரவத்தில் விந்து செல்கள் இருப்பதில்லை
2. விந்தக மேல் சுருண்ட குழலில் (எபிடிடைமிஸ்) விந்து செல்கள் இருப்பதில்லை
3. விந்து நாளங்கள் துண்டிக்கப்பட்டு முடிச்சு போடப்படுகிறது.
4. மீள முடியாத மலட்டுத்தன்மை

99. உடல்வெளி கருவுறுதல் மூலம் உருவான 16 அல்லது அதற்கு மேல் பிளாஸ்டோமியர்கள் உள்ள கருவை எங்கு இடமாற்றம் செய்யலாம் (CBSE 2016 P II)

1. கருப்பை
2. ∴பெலோபியன் நாளம்
3. நுண்நீட்சிகள்.
4. கருப்பை வாய்

100. கருத்தடை சாதனம் ” சாஹெலி ” என்பது ? ( CBSE - 2018 )

(1) கருப்பையில் எஸ்ட்ரோஜன் உணர்வேற்பிகளை தடுத்தல் (ம) கருமுட்டை கருபதிதலை தடைசெய்தல்
(2) பின் கருத்தடைதடுப்பு முறை
(3) இது ஒரு உள் கருப்பை சாதனம்
(4) எஸ்ட்ரோஜன் அளவை அதிகரித்து அண்ட விடுபடுதலை பெண்களில் தடை செய்தல்